RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 49 | பிப்ரவரி.25 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000 கருணைத் தொகை’ அதிமுக 3ம் கட்ட தேர்தல் வாக்குறுதியை அறிவித்தார் பழனிசாமி

சென்னை: பிப்.25-

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் கருணைத் தொகை வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 6 வாக்குறுதிகளை அதிமுக மூன்றாம் கட்டமாக வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 2 கட்ட வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று (பிப்.24) 3ம் கட்ட வாக்குறுதிகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார்.

அந்த வாக்குறுதிகள் குறித்து அதிமுக வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

1. ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விஷம்போல் ஏறி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், சொத்து வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம், குடிநீர் வரி போன்ற பல வரிகளும் உயர்த்தப்பட்டுவிட்டது. இதனால், மக்களின் அன்றாட குடும்பச் சுமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே, மக்களின் சுமையை குறைக்கும் வகையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக 10,000 ரூபாய் வழங்கப்படும்.

2. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 2,000



ரூபாயும்; +2 வரை படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும்.

3. மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை 8,000 ரூபாயில் இருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

4. ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் அன்று வழங்கப்பட்டு வரும் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து 1,000 ரூபாய் வழங்கப்படும்.

5. கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட்டாகவும்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டில் இருந்து 1,400 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

6. நகரப் பகுதிகளில் நடைபாதை ஓரமாக கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதியில் * முதியோர் உள்ளிட்டவர்களுக்கான ஓய்வூதியங்கள் ரூ. 2,000மாக உயர்வு

* வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி

* வாழ்வாதார உதவியாக, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும்

* ஜல்லிக்கட்டில் உயிரிழந்தால் நிவாரணம்

* சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளாக, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும், ஆகிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்தது நினைவுகூரத்தக்கது.

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள்: பிரதமர் மோடி, இபிஎஸ் புகழாரம்

சென்னை: பிப்.25-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமியும் அவரை புகழ்ந்து பேசியுள்ளனர்.

பிரதமர் நரேந்திர மோடி: “ஜெயலலிதா பிறந்த நாளில் அவரை நினைவுகூர்கிறேன். மனம் கவர்ந்த தலைவர் மற்றும் தலைசிறந்த நிர்வாகியாக எண்ணற்ற மக்களின் இதயங்களிலும், மனங்களிலும் அவர் இடம் பிடித்துள்ளார். அவரது வாழ்க்கைப் பயணம் மன உறுதி மற்றும் தீர்மானத்துடன் இருந்தது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து வலுவான நோக்கத்துடனும், சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நலத்திட்டங்களாலும் இயக்கப்பட்ட நிர்வாகத்தில் சிறந்த ஆட்சியாளராக திகழ்ந்தார். கருணை, உறுதி என்ற இரண்டு பண்புகளையும் அவர் கொண்டிருந்தார். அவருடனான எனது கலந்துரையாடல்களை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் நினைவுகூர்கிறேன்” என்று எக்ஸ் வலைதள பதிவில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, இந்த மாத மனதின் குரல் நிகழ்ச்சியிலும் ஜெயலலிதாவை பிரதமர் மோடி புகழ்ந்து பேசி இருந்தார். அதில் கூறியதாவது: சிலர் எப்போதும் மக்களின் இதயங்களில் நீங்காமல் குடிகொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர் ஜெயலலிதா. மக்கள் போற்றும் மகத்தான தலைவராக விளங்குகிறார். பிப்.24 அவரது பிறந்தநாள். அவர் மீது தமிழக மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு இருக்கும் ஈடுபாடு ஆழமானது.



அவர் முதல்வராக இருந்தபோது பெண்கள், தாய்மார்கள், சகோதரிகளுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார். சட்டம் ஒழுங்கை சீராக வைத்திருந்தார்.

இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம் மீது மிகுந்த பெருமிதம் கொண்டிருந்தார். அவரிடம் தேசபக்தி உணர்வு மிகவும் செறிவாக இருந்தது. எண்ணம் தெளிவாக இருந்தது. கருத்துகள் நிறைவாக இருந்தன. ஜெயலலிதா உடனான என்னுடைய ஒவ்வொரு சந்திப்பும், உரையாடலும் என் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளன. அவருடைய நட்புணர்வை என்னால் மறக்கவே முடியாது. அவருக்கு தலைவணங்கி அஞ்சலி செலுத்துகிறேன் என்று பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி: “முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் 78வது பிறந்த நாளில், அவரது நெடும் புகழை போற்றுகிறோம், “அம்மா” எங்களின் அடையாளம் ஞ் ஏழைகளின் நம்பிக்கை, பெண்களின் தைரியம், தாய்மையின் உருவம்.

அதிகாரம் அவரை உயர்த்தவில்லை; மக்கள் மீது கொண்ட அன்பே அவரை உயர்த்தியது. அவரின் ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு தீர்மானமும், வறுமை ஒழிப்புக்கான சர்வதேச அளவில் தரநிலையை நிறுவி ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றியது.

சோதனைகள் சூழ்ந்த தருணங்களிலும் அசைக்க முடியாத மனவலிமையுடன் தமிழகம் காக்க போராடிய தலைவர். மக்கள் பணிக்கான எங்கள் அனைத்து செயல்களிலும் உங்கள் புத்தகத்திலிருந்து ஒரு அத்தியாயத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று அவர் சொன்னதைப் போல, அதிமுக என்றென்றும் மக்கள் இயக்கமாகவே திகழ்கிறது.

“எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும்” என்று அவர் சூளுரைத்தார். அந்த வெற்றி முழக்கத்தை, கொள்கைப் பிரகடனத்தை செயல்படுத்திட நாம் அனைவரும் உறுதி ஏற்க வேண்டிய நாள்தான் அவரது பிறந்த நாள்.

அஇஅதிமுக அரசின் சாதனைகளையெல்லாம், தங்களது சாதனைகளாக பொய்ப் பிரச்சாரம் செய்து வரும் திமுகவினரின் பிரச்சாரங்களை முறியடித்து, கழகத்தின் தலைமையிலான பொற்கால ஆட்சியில் செய்திட்ட சாதனைகளையெல்லாம் எடுத்துக் கூறி, தேர்தல் களத்திலே மாபெரும் வெற்றியைப் பெறுவதற்கு அயராது உழைப்போம்! ஜெயலலிதாவின் உண்மைத் தொண்டர்களாகப் பணியாற்றுவோம்! என்று அவரது பிறந்த நாளில் வீரசபதம் ஏற்போம். ‘நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’” என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி பதிவிட்டுள்ளார்.

# “அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில் நான் செய்த தவறு என்ன?” ஓபிஎஸ் ஆவேசம்

போடி: பிப்.25-

“என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்” என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு போடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஓபிஎஸ் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: “ஜெயலலிதா இறந்த பிறகு எனக்கு முதல்வராவதில் விருப்பமில்லை. ஆனால், என்னை கட்டாயப்படுத்தி முதல்வர் ஆக்கினார்கள். அதன் பிறகு, என்னை பல்வேறு வகையிலும் அவமானப்படுத்தி முதல்வர் பதவியில் இருந்து வெளியேற்றினார்கள்.

ஒவ்வொரு முறையும் எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சியிலும் இருந்தாலும் ஆட்சி முடிந்ததும் அனைவருக்கும் வாழ்த்து சொல்வது எனது மரபு. அந்த அடிப்படையிலே திமுக ஆட்சிக்கு வாழ்த்து தெரிவித்தேன்.



ஆனால் நான் திமுகவுக்கு ஆதரவு தெரிவிப்பதுபோல கருத்து பரவி விட்டது. டிடிவி தினகரன் என்னை பசுத் தோல் போர்த்தியப் புலி என்று கூறியுள்ளார்.

அரசியல் நாகரிகம், பண்பாடு கருதி நான் கடின வார்த்தைகளை பயன்படுத்துவது இல்லை. நான் நினைத்தால் அவரை விட மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கருத்து கூற முடியும். நான் இனி சங்கர மடத்துக்கா செல்ல முடியும்?

என்னை இந்த அளவுக்கு அரசியலில் தனிமைப்படுத்தும் வகையில், நான் என்ன தவறு செய்து விட்டேன்? அந்த உண்மையைச் சொல்லுங்கள்... நான் அரசியலை விட்டு விலகி விடுகிறேன்.

திமுக பலமான கூட்டணியில் உள்ளது. ஆகவே, அவர்களை வெல்ல அதிமுகவினர் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

நான் போடி தொகுதியில் போட்டியிடுகிறேனா என்று ஆண்டவனுக்குதான் தெரியும். தனிக்கட்சி தொடங்க மாட்டேன். எம்ஜிஆர் ஜெயலலிதா ஆகியோர் அதிமுக கட்சியில் வகித்த சட்ட விதிமுறைகளை மீண்டும் கொண்டு வரும் வரை அதிமுகவுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்திக் கொண்டே இருப்பேன்” என்றார் ஓபிஎஸ்.

# தொகுதிப் பங்கீடு: திமுகவுடன் பேச்சு நடத்த குழு அமைத்தது இ.கம்யூனிஸ்ட்

சென்னை: பிப்.25-

சட்டப்பேரவை தேர்தலையொட்டி திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 4 பேர் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்: ”இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொகுதி பகிர்வு பேச்சுவார்த்தைக் குழு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

நான்கு உறுப்பினர்கள் பேச்சுவார்த்தைக் குழு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் பெற்றுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், தி.மு.கழக தலைமையோடு



தொகுதி பகிர்வு பேச்சுவார்த்தை நடத்த தோழர்கள் மு.வீரபாண்டியன், (மாநிலச் செயலாளர்) இரா. முத்தரசன், கே.சுப்பராயன் எம்.பி., கோ.பழனிசாமி ஆகிய நான்கு உறுப்பினர்கள் கொண்ட பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு வரும் பிப்.27ம் தேதி முதல் கட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.” என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

ஏற்கெனவே இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி ஆகியன தொகுதிப் பங்கீடு குறித்து முதல்கட்ட சந்திப்பை முடித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# சாலையை ஆக்கிரமித்து கட்டியதாக கூறி கோயிலை இடிக்க பிறப்பித்த உத்தரவு ரத்து

சென்னை: பிப்.25-

சென்னை கொடுங்கையூர் பகுதியில் உள்ள ஒரு கோயில் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக கூறி, 7 நாட்களில் அதை இடிக்க வேண்டுமென மாநகராட்சி நிர்வாகம் தரப்பில் கடந்த ஆண்டு கோயில் நிர்வாகத்துக்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

இதை எதிர்த்து கோயில் நிர்வாகம் தரப்பில் ஜெயா என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதில், ‘தங்களது தரப்பில் விளக்கம் அளிக்க எந்தவொரு கால அவகாசமும் அளிக்காமல், கோயில் ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு நடத்தாமல், நேரடியாக கோயிலை இடிக்க வேண்டுமென அதிகாரிகள் உத்தரவிட்டு இருப்பது சட்டவிரோதமானது’ என தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள், மாவட்ட ஆட்சியர்,வருவாய் ஆணையரின் பரிந்துரைப்படி சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏற்கனவே உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்தும் வகையில், சம்பந்தப்பட்ட கோயில் சாலையை ஆக்கிரமித்து உள்ளதாக குறிப்பிட்டு எந்த களஆய்வும் நடத்தாமல் நேரடியாக கோயிலை 7 நாட்களுக்குள் இடிக்க வேண்டுமென மாநகராட்சி நிர்வாகம் உத்தரவிட்டிருப்பது ஏற்புடையதல்ல.

சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிக்க, விளக்கமளிக்க போதிய அவகாசம் வழங்கும் வகையில் விளக்கம் கோரும் நோட்டீஸ் பிறப் பித்து, அதன்பிறகே இறுதி உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட கோயில் சாலையோர ஆக்கிரமிப்பில் உள்ளதா என்பதை மண்டல அளவிலான கண்காணிப்பு குழு ஆய்வு செய்ய வேண்டும். அதன்பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் தரப்பில் விளக்கமளிக்க வாய்ப்பளித்து, சட்டப்பூர்வமாக நோட்டீஸ் பிறப்பித்து, அதன்பிறகே கோயிலை இடிப்பது தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும். எனவே, இதுதொடர்பாக மாநகராட்சி நிர்வாகம் தரப்பில் கோயிலை இடிக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்படுகிறது என உத்தரவிட்டுள்ளனர்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## காரைக்குடி தமிழ்க் கல்லூரியில் சொற்பொழிவு விழா சிறப்பாக நடைபெற்றது




காரைக்குடி, பிப். 25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி – இலுப்பைக்குடி சாலையில் அமைந்துள்ள இராமசாமி தமிழ்க் கல்லூரியில் "பெரியார் பேருரையாளர்" புலவர் ந. இராமநாதன் அறக்கட்டளை சார்பில் சொற்பொழிவு நிகழ்ச்சி திங்கள்கிழமை காலை நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு காரைக்குடி கழக மாவட்ட தி.க. காப்பாளர் சாமி திராவிடமணி தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் பெரி. வீரப்பன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் செநாக நாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். புலவர் உ. தேவதாசு அறிமுகவுரையாற்றினார். திராவிடர் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் வழக்குரைஞர் அ. அருள்மொழி, "சீரிளமை திறம் வியந்துஞ்" என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார்.இந்நிகழ்வில் தி.க. பொதுக்குழு உறுப்பினர் தி. செயலெட்சுமி, மாவட்ட தி.க. தலைவர் ம.கு. வைகறை, மாநில ப.க.து. செயலாளர் முனைவர் மு.சு. கண்மணி, மாவட்ட ப.க. தலைவர் செல்வம் முடியரசன், கல்லூரி மேனாள் முதல்வர் மெய்யம்மை, புலவர் இராம. அருச்சுணன், வழக்குரைஞர் வி.பி. கமல தயாளன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் புலவர் பட்டப்படிப்பு மாணவ–மாணவியர்கள் மற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க.வில் 50 பேர் இணைப்பு — அசோக்குமார் எம்.எல்.ஏ. வரவேற்பு



கிருஷ்ணகிரி, பிப். 25-

கிருஷ்ணகிரியை சேர்ந்த ஓய்வு பெற்ற சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் வாசு கடந்த மாதம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.)வில் இணைந்தார். இதனைத் தொடர்ந்து, நேற்று அவரது தலைமையில் பாஞ் சாலியூர், வேட்டியம்பட்டி மற்றும் புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பைச் சேர்ந்த 50 பேர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்வில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வு கட்சியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான K. Ashok Kumar முன்னிலையில் நடைபெற்றது. புதிய உறுப்பினர்களுக்கு அவர் கட்சி துண்டுகளை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

அவர் பேசுகையில், கட்சிப் பணிகளில் தீவிரமாக செயல்பட்டு, அ.தி.மு.க. ஆட்சியின் நான்கு ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் மற்றும் தேர்தல் அறிக்கையை பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும், வரும் தேர்தலில் Edappadi K. Palaniswami தலைமையில் மீண்டும் ஆட்சி அமைய அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் கிழக்கு ஒன்றிய செயலாளர் கண்ணியப்பன், விவசாய அணி ஒன்றிய செயலாளர் ராஜு, மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணை செயலாளர் ராஜாராவ், மாவட்ட இளைஞர் அணி பொருளாளர் கோகுல் கண்ணன், ஐ.டி. பிரிவு நிர்மல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடியில் தொல்லியல் கருத்தரங்கம்

காரைக்குடி, பிப். 25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தொல்லியல் மரபு மன்றத்தின் சார்பில் "சிவகங்கை மாவட்டத் தொல்லியல்" என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற்றது.கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம் வரவேற்புரை ஆற்றினார். இணைப் பேராசிரியர் முனைவர் வேலாயுத ராஜா சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தினார். தமிழகத் தொல்லியல் துறை மேனாள் உதவி இயக்குநர் முனைவர் சாந்தலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழிக் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளதையும், குடைவரைக் கோயில்கள் மற்றும் முற்கால பாண்டியர் கட்டுமானக் கோயில்கள் தொன்மை வாய்ந்தவை என்றும் விளக்கினார். தமிழக வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக களப்பிரர் கால பூலாங்குறிச்சிக் கல்வெட்டு அமைந்ததாகவும் குறிப்பிட்டார்."தொல்லியல் தேடல்களில் கல்லூரி மாணவர்களின் பங்கு" என்ற தலைப்பில் ராஜகுரு உரையாற்றி, மாணவர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள தொல்லியல் சான்றுகளைத் தேடி ஆவணப்படுத்த வேண்டும் என்றும், கருப்புசிவப்பு பானை ஓடுகள், சீனரூ ரோமானிய பானை ஓடுகள், இரும்புத் தாதுக்கள் உள்ளிட்ட பொருட்களை அடையாளம் காணும் முறைகளை விளக்கினார். கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கில் இடம்பெற்ற தொல்லியல் பொருட்கள் கண்காட்சியை மாணவர்கள் பார்வையிட்டனர். வரலாற்றுத் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் தங்கராஜ் நன்றி கூறினார். நிகழ்வில் பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## தேனி மாவட்டம் வாக்குச் சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தேனி, பிப்.25-

தேனி மாவட்டம், 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பி.சி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அல்லிநரகம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 198. ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி, 199. பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, 200. போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி மற்றும்

201. கம்பம் சட்டமன்றத் தொகுதி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, இன்று 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பி.சி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அல்லிநரகம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் வாகன நிறுத்துமிடம் வசதி, சாய்வுதளம் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுலவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாக்குச்சாவடி மையங்களில் பழுதுகள் ஏதேனும் இருந்தால், அதனை உடனடியாக சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், குறிப்பாக, ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடி மையங்களை கொண்டுள்ள வாக்குச்சாவடி அமைவிடங்களில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் மற்றும் வாக்காளர்கள் எந்தஒரு இடையூறுமின்றி வாக்களிக்கும் வகையில் தனித்தனியாக தடுப்புகள் அமைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுலவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின்போது, உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / வட்டாட்சியர் (தேனி) .சதீஸ்குமார், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / நகராட்சி ஆணையாளர்

(தேனி அல்லிநகரம்) செல்வி பார்கவி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.




## உழவடை நிலத்தில் கால்வைக்கத் தடை?" – போலீஸ் மிரட்டல் குற்றச்சாட்டு; கலெக்டரிடம் விவசாயி மனு

மதுரை, பிப்.25-

மதுரை மாவட்டம், வடக்கு தாலுகா மந்திகுளம் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தபாபு, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துவிட்டு செய்தியாளர்களிடம் பேசினார். அவர் கூறுகையில், மந்திகுளம் கிராமத்தில் குறிப்பிட்ட சர்வே எண்ணில் உள்ள ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்தை தங்கள் குடும்பம் மூன்று தலைமுறையாக உழவடை விவசாயம் செய்து வருவதாக தெரிவித்தார்.

மேற்படி நிலத்தின் உரிமையாளர் தங்களை நிலத்தில் இருந்து வெளியேறும்படி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், அதற்கு எதிராக நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளதாகவும் கூறினார். மேலும் வடக்கு வட்டாட்சியரிடம் உழவடை வழக்கு தாக்கல் செய்துள்ளதுடன், "சிவில் பிரச்சினையில் காவல் துறையினர் தலையிடக்கூடாது" என உத்தரவிட கோரி சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்களை குறிப்பிட்ட நிலத்திற்குள் செல்லக்கூடாது என மிரட்டுவதாக குற்றஞ்சாட்டி, இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளதாக ஆனந்தபாபு கூறினார்.




## அங்காளம்மன் திருவிழா தாக்குதல் விவகாரம்: காவேரிப்பட்டினத்தில் பாமக – வன்னியர் சங்கம் கண்டனப் போராட்டம்

கிருஷ்ணகிரி, பிப்.25-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேருந்து நிலையம் அருகே பாட்டாளி மக்கள் கட்சி(பாமக) மற்றும் வன்னியர் சங்கம் சார்பில் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அங்காளம்மன் கோவில் தேர் திருவிழாவின் போது வன்னியர் சங்கம் மற்றும் பாமகவைச் சேர்ந்தவர்களை குறிவைத்து கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம்சாட்டி, சம்பந்தப்பட்டவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்திற்கு பாமக மாவட்ட செயலாளர் மோகன்ராம் தலைமை தாங்கினார். வன்னியர் சங்க மாவட்ட தலைவர் சோமு சுந்தரம் வரவேற்று உரையாற்றினார். மாநில துணைத் தலைவர்கள் பாடி செல்வம், சுப.குமார், மாதேஸ்வரன், மின்னல் சிவக்குமார், மஞ்சுநாத், அமுல்ராஜ், கோவிந்தராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்தனர். ஒன்றிய, நகர, பேரூராட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

திருவிழா நிகழ்ச்சியின் போது மஞ்சள் சட்டை அணிந்தவர்களை அடையாளம் கண்டு தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இது முன்கூட்டியே திட்டமிட்டு செய்யப்பட்டதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர். பொதுமக்களை அச்சுறுத்தும் ரவுடிகளை காவல்துறை முன்கூட்டியே கட்டுப்படுத்த தவறியதால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், காவேரிப்பட்டினம் பகுதியில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், இதனை கட்டுப்படுத்த காவல்துறை தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். குற்றச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கி, இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

## உலக சாரணர் இயக்கத் தந்தை பேடன் பவல் பிறந்தநாள்: தாராபுரத்தில் நூற்றாண்டு சிந்தனை நாள் திறலணி




திருப்பூர், பிப்.25-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உலக சாரணர் இயக்கத்தை தோற்றுவித்த Robert Baden-Powell அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, பாரத சாரண சாரணிய சங்கம் தாராபுரம் சார்பாக உலக நூற்றாண்டு சிந்தனை நாள் திறலணி இன்று திங்கட்கிழமை மதியம் நடைபெற்றது.

சாரணர் இயக்கம் 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டு, உலகம் முழுவதும் இளைஞர்களுக்கு ஒழுக்கம், தன்னம்பிக்கை, சமூகப் பொறுப்பு மற்றும் தேசப்பற்று ஆகிய பண்புகளை வளர்க்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி 22ஆம் தேதி "உலக சிந்தனை நாள்" ஆகக் கடைப்பிடிக்கப்பட்டு, உலக சகோதரத்துவம் மற்றும் சேவை உணர்வை வலியுறுத்தும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தாராபுரம் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 23 பள்ளிகளின் 260 சாரணர்களும் 230 சாரணியர்களும் சீருடைகளுடன் உற்சாகமாகப் பங்கேற்றனர். நகராட்சி மேல்நிலைப்பள்ளி, பொள்ளாச்சி சாலை வளாகத்தில் இருந்து ட்ரம் செட் முழங்கத் தொடங்கிய, பேரணி பெரிய கடைவீதி, பூக்கடைக்காரனார் அண்ணா சிலை, சர்ச் சாலை, தாலுகா அலுவலக சாலை, புதிய நகராட்சி அலுவலக சாலை, ஐந்து சாலை சந்திப்பு வழியாக சென்று தாராபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நிறைவுற்றது. பேரணியின் முழு பாதையிலும் பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர்.

நிகழ்விற்கு தாராபுரம் மாவட்ட சாரணச் செயலர் மற்றும் சின்னக்காம்பாளையம், தலைமை ஆசிரியருமான பெரியசாமி வரவேற்புரை வழங்கினார். தாராபுரம் டிஎஸ்பி எல். சிவகுமார் வாழ்த்துரை வழங்கி, கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைத்தார். விவேகம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் ஆர். சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து தாராபுரம் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், சாரணர் இயக்கத்தின் முக்கியத்துவம், மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி மற்றும் சமூகப் பங்களிப்பில் அதன் பங்கு குறித்து விளக்கினார். இறுதியில் பொருளாளர் அருள் செந்தில்குமார் நன்றியுரை வழங்கினார்.

உலக சாரணர் இயக்கம் தற்போது 170க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு, கோடிக்கணக்கான இளைஞர்களை சமூக சேவையில் ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பேரணிகள் மாணவர்களிடையே ஒற்றுமை, கட்டுப்பாடு மற்றும் சேவை மனப்பாங்கை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக கல்வியாளர்கள் தெரிவித்தனர்.




# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் பொதுத்தேர்வுகள் 2026 குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம்

நீலகிரி, பிப்.25-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பத்தாம் வகுப்பு, பதின்னொன்று மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் 2026 குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில் ( மார்ச் / ஏப்ரல் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத் தேர்வுகளை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. பொதுத் தேர்வுகள் சீருடனும், பாதுகாப்புடனும், தடையின்றியும் நடைபெற தேவையான முன்னேற்பாடுகள் குறித்தும், காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள், மின்வசதி,, போக்குவரத்து வசதிகள், தீயணைப்பு பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து பொதுத் தேர்வுகள் அமைதியான மற்றும் ஒழுங்குமுறை சூழலில் நடைபெற அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

கூடுதல் இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், காவல் கண்காணிப்பாளர் சௌந்திரராஜன், வருவாய் கோட்டாட்சியர்கள் டினு அரவிந்த், (உதகை) குணசேகரன் (கூடலூர்), முதன்மைக் கல்வி அலுவலர் திருநாவுககரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் 5,55,131 வாக்காளர்கள் உள்ளனர் மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி தகவல்

பெரம்பலூர், பிப்.25-

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ந. மிருணாளினி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வெளியிட்டார்.




பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

பெரம்பலூர் மாவட்டத்தில் 01.01.2026 நாளினை தகுதி நாளாகக் கொண்டு நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தம், 2026 கடந்த 28.10.2025 அன்று துவங்கப்பட்டது.

இப்பணியில் 652 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (BLO), அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமனம் செய்யப்பட்ட 2,277 வாக்குச்சாவடி நிலை முகவர்களும் (BLA-2) மற்றும் இல்லம் தேடிக்கல்வி குழுவினர், மகளிர் சுய உதவிக்குழுவினர், ஊராட்சிகளின் கணினி இயக்குபவர்கள் என 783 தன்னார்வலர்களும் 105 சிறப்பு அலுவலர்களும் ஈடுபட்டனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 19.12.2025 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 1,36,304 ஆண் வாக்காளர்களும் 1,44,235 பெண் வாக்காளர்களும், 27 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 2,80,566 வாக்காளர்கள் இடம்பெற்றிருந்தனர்.

பாலின வாக்காளரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதுபோல் 148 குன்னம் சட்டமன்ற தொகுதியில் 3,729 ஆண் வாக்காளர்களும், 4,532 பெண் வாக்காளர்களும் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறப்பு, இரட்டை பதிவு மற்றும் இடப்பெயற்சி காரணமாக 147. பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் 1,423 ஆண் வாக்காளர்களும், 1,799 பெண் வாக்காளர்களும், 148. குன்னம் சட்டமன்ற தொகுதியில் 826 ஆண் வாக்காளர்களும், 1,129 பெண் வாக்காளர்களும் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று வெளியிடப்படுகின்ற இறுதி வாக்காளர் பட்டியலின் படி 147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்கு சாவடிகளில் மொத்தம் 2,88,449 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,39,914 ஆண் வாக்காளர்களும், 1,48,507 பெண் வாக்காளர்களும், 28 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர்.

148குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்கு சாவடிகளில் மொத்தம் 2,66,682 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 1,31,720 ஆண் வாக்காளர்களும், 1,34,959 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலின வாக்காளர்கள் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் 2,71,634 ஆண் வாக்காளர்களும் 2,83,466 பெண் வாக்காளர்களும், 31 மூன்றாம் பாலின வாக்காளர்கள் என மொத்தம் 5,55,131 வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீட்டிற்கு பிறகு வாக்காளர் பட்டியலில் தொடர் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதால் வாக்காளர்கள் தங்களது பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் மேற்கொள்ள விண்ணப்பங்கள் வழங்கிடலாம்இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சொர்ணராஜ், வாக்காளர் பதிவு அலுவலர்கள் (குன்னம்) சக்திவேல், (பெரம்பலூர்) அனிதா, தனி வட்டாட்சியர் (தேர்தல்)அருளானந்தம், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள் கலந்துகொண்டனர்.

# தாம்பரத்தில் விடுதி உரிமையாளர்கள் சொத்து வரி விவகாரத்தில் உரிய தீர்வு கோரி ஆணையரிடம் மனு அளித்தனர்

தாம்பரம் பிப். 25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் விடுதி மற்றும் பி.ஜி. உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பில் முக்கிய கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



தாம்பரம் மாநகராட்சி ஆணையரை நேரில் சந்தித்த சங்க நிர்வாகிகள், சொத்து வரி தொடர்பான குழப்பத்திற்கு உடனடி தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தாம்பரம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் சென்னை முழுவதும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஹாஸ்டல்கள் மற்றும் பி.ஜி. வசதிகள் இயங்கி வருகின்றன.

இவ்விடுதிகளில் வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக தாம்பரம் மாநகராட்சி யிலிருந்து சில விடுதி உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு, வீட்டு வரிக்கு பதிலாக கமர்ஷியல் வரி செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் விடுதி உரிமையாளர்களிடையே அதிருப்தி மற்றும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி வழங்கிய நீதிமன்ற உத்தரவின்படி, முழுமையாக விடுதியாக செயல்படும் கட்டிடங்களுக்கு வீட்டு வரியே வசூலிக்க வேண்டும், கமர்ஷியல் வரி விதிக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற சூழ்நிலையிலும், சில அதிகாரிகள் அழுத்தம் கொடுத்து, தண்ணீர் இணைப்பை துண்டிப்பது மற்றும் கட்டிடத்தை பூட்டுவது போன்ற எச்சரிக்கைகள் விடுப்பதாக சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

விடுதி நடத்துவது ஒரு சேவை சார்ந்த சமூகத் தேவையாக அரசாங்கமே கருதி வருகிறது. இதனை கருத்தில் கொண்டு மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியது.

மனுவை பெற்றுக்கொண்ட மாநகராட்சி ஆணையர், விவகாரத்தை விரைவாக ஆய்வு செய்து உரிய தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில் ஹாஸ்டல் மற்றும் பி.ஜி. யூனிட் வெல்போர் அசோசியேஷன் தலைவர் மகேந்திர பூபதி, துணை தலைவர் மகேஸ்வரி மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேலும், இதன் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளையும் சந்திக்க உள்ளதாக அவர்கள் தெரி வித்துள்ளனர்.

# மாருதி இ விட்ரா மின்சார கார் வெளியீடு –விழா நெய்வேலியில் விஷ்ணு கார்ஸ் ல் நடைபெற்றது மத்திய அமைச்சர் பங்கேற்பு

நெய்வேலி, பிப். 25-

Maruti நிறுவனத்தின் முதல் மின்சார SUV வாகனமான Maruti e VITARA கார் வெளியீட்டை ஒட்டி, நெய்வேலியில் விஷ்ணு கார்ஸ் ல் நடைபெற்றது.




இந்த நிகழ்வு மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் T. கிஷன் ரெட்டி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் NLC India Limited தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் மோட்டுபள்ளி, Vishnu Cars Private Limited நிறுவனத்தின் இயக்குநர் விஷ்ணு இம்மானி மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்வேதா செப்ரோலு ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

Maruti e VITARA மின்சார வாகனம், இந்தியாவில் மின்சார வாகனத் துறையில் Maruti நிறுவனத்தின் முக்கியமான முன்னேற்றமாகும். Battery-asa-Service (BaaS) முறைமையின் மூலம் வாகனத்தை வாங்கும் போது ஆரம்ப முதலீட்டை குறைக்கும் வகையில் இந்த மாடல் அறிமுக ப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த மின்சார SUV வாகனம் இரண்டு வகை பேட்டரி திறன்களில் (49 kWh மற்றும் 60 kWh) அறிமுகமாகி, சுமார் ₹10.99 லட்சம் முதல் விலைக்குள் கிடைக்கிறது. பத்தி ரிகையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துவதில் இத்தகைய புதிய முயற்சிகள் முக்கிய பங்கு வகிக்கும் என குறிப்பிடப்பட்டது.

இந்த வெளியீட்டு விழா மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு, நிலையான மற்றும் சுத்தமான போக்குவரத்து நோக்கில் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு ஒரு முக்கியமான படியாக அமைந்தது.



# தேனிமாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்வு வேட்பாளர்ஆய்வு குழு மற்றும் ஆலோசனைக் கூட்டம்

தேனி பிப். 25-

தேனி மாவட்டம் தேனியில் மாவட்ட காங்கிரஸ் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கும் ஆலோசனைக் கூட்டம் ஹோட்டல் ஸ்ரீ தெய்வா கூட்டம் அரங்கில் நடைபெற்றது இந்தக் கூட்டத்திற்கு ஏ கோபிநாத், காங்கிரஸ் மாவட்ட தலைவர் தலைமை ஏற்று பேசினார் இதில் முன்னாள் மாவட்ட தலைவர் முருகேசன், மாநில மருத்துவர் அணி தலைவர் டாக்டர் தியாகராஜன், வர்த்தக பிரிவு தலைவர் சங்கரநாராயணன், மகளிர் அணி மாவட்ட தலைவர் கிருஷ்ணவேணி, மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவு மாநில பொதுச் செயலாளர் இனியவன், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் ராஜா முகமது, மாவட்ட மாணவரணி அணி தலைவர் ஜாசிம், மாவட்ட ஓ பி எஸ் பிரிவு தலைவர் மைதீன், முன்னாள் மாவட்ட செயலாளர் சம்சுதீன், முன்னாள் மாவட்ட துணை தலைவர் சன்னாசி, தேனீ நகர பொருளாளர் சுதாகர், முன்னாள் மாவட்ட செயலாளர் ரத்தினசாமி, தேனி நகர செயலாளர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட நகர தலைவர்கள் வட்டார தலைவர்கள் மற்றும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்களும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.



# பழனியில் மாநில இளைஞரணி சார்பாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது

திண்டுக்கல், பிப்.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனி மாரியம்மன் மாசி திருவிழாவை முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் அறிவுறுத்தலின்படி மாநில இளைஞரணி செயலாளர் சூர்யா உத்தரவின் படி மாநில இளைஞரணி துணைத் தலைவர் கமலேஸ்வரன் தலைமையில் மாபெரும் அன்னதான விழா நிகழ்ச்சி நடைபெற்றன. மாசித் திருவிழா கடந்த 10ஆம் தேதி திருக்கம்பம் நடுதலுடன் தொடங்கியது. இதை முன்னிட்டு, திருக்கோயில் முன்பாக நாள்தோறும் காஞ்சி காமாட்சி அம்மன், வக்ரகாளியம்மன், சமயபுரம் மாரியம்மன், மகாலட்சுமி, லட்சுமி சரஸ்வதி, களக்காடு முப்பிடாதியம்மன், அழகுநாச்சியம்மன் என பல்வேறு அலங்காரங்களில் அம்மன் எழுந்தருளினார்.

தொடர்ந்து பக்தர்களுக்கு பல்வேறு வகையான உணவுகள் தயார் செய்யப்பட்டு பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்கி சிறப்பித்தனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் சௌந்தரபாண்டி, தேஜஸ்வர்,

அருள்ஜோதி, உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றன.. நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் கட்சி பெருமக்களுக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினர்

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் இறுதி வாக்காளர் பட்டியலை அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்

நீலகிரி, பிப்.25-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட அங்கிகரிக்கப்பட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அங்கீரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளி யிட்டார்.




இந்நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரை யின்படி, 01.01.2026ஐ தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 ஆனது 04.11.2025 முதல் 10.02.2026 வரை நடைபெற்றது. மேற்படி காலத்தில் வாக்காளர்களிடமிருந்து பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலின் படி நீலகிரி மாவட்டத்தில் 2.61.317 ஆண் வாக்காளர்களும், 2,85,791 பெண் வாக்காளர்களும், 25 மூன்றாம் பாலித்தனவர்களும் என மொத்தம் 5,47,133 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். கடந்த 19.12.2025 அன்று வெளி யிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்த வாக்காளர்களை விட 14,057 வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர்.

இதில் 108 உதகை சட்டமன்ற தொகுதியில் 89,066 ஆண் வாக்காளர்களும், 98,348 பெண் வாக்காளர்களும், 11 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1,87,425 வாக்காளர்களும், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதியில் 89,206 ஆண் வாக்காளர்களும், 94,675 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1,83,888 வாக்காளர்களும்,

91

110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 83,045 ஆண் வாக்காளர்களும், 92,768 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1,75,820 வாக்காளர்களும் இடம் பெற்றுள்ளனர். இன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி லோகநாயகி, வாக்காளர் பதிவு அலுவலர்கள் /குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதாவருவாய் கோட்டாட்சியர்கள் டினு அரவிந்த் (உதகை), குணசேகரன் (கூடலூர்), தேர்தல் தனி வட்டாட்சியர் சீனிவாசன், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநி திகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டம் குன்னூர் தோட்டகலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் குன்னூர் வட்டார விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி



நீலகிரி, பிப்.25-

தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் மாநில தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் காய்கறி மற்றும் பழம் சாகுபடிக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் குன்னூர் வட்டாரத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் வழங்கப்பட உள்ளது என்பதை குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் .

ம.விஜியலட்சுமி தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக குன்னூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் குன்னூர் வட்டார விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும் இதில் தோட்டக்கலை உதவி இயக்குநர் (மண் ஆய்வு கூடம்) கி.அனிதா முன்னிலை வகித்து திட்டங்களை பற்றி சிறப்புரையாற்றினார். மேலும் இதில் குன்னூர் வட்டார தோட்டக்கலை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். இதில் 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி அருகே தனியார் பள்ளி வாகனம் கவிழ்ந்து விபத்து



ராமநாதபுரம், பிப்.25-

ராமநாதபுரம் மாவட்டம் சத்திரக்குடி அருகே தனியார் பள்ளி வாகனம் அதிகாலையில் சுமார் 30க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களை ஏற்றி வரும் பொழுது பள்ளி வளாகத்திற்கு அருகே வந்த பொழுது பின்னால் வந்த லாரி மோதியதில் நிலை தடுமாறி பள்ளி வாகனம் குழந்தைகளுடன் கவிழ்ந்து விபத்துக்குள்ளாது இதில் சுமார் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயம் ஏற்பட்டது இவர்களை ஆம்புலன்ஸ் மூலம் ராமநாதபுரம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் இச்சம்பவத்தை அறிந்த பெற்றோர்கள் பொதுமக்களும் பேருந்து கவிழ்ந்த இடத்தில் குவிந்தனர் அங்கு சத்திரக்குடி காவல்துறையினர் போக்குவரத்து நெரிசலை சரி செய்தனர் இதைத்தொடர்ந்து பள்ளி மாணவர்கள் அனைவரையும் ஆம்புலன்ஸ் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கும் ராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும் அழைத்து சென்றனர் மேற்படி காயம் ஏற்பட்ட பள்ளி குழந்தைகளை ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டு உரிய சிகிச்சை அளிக்கும்படி மருத்துவர்கள் இடம் கேட்டுக்கொண்டார்




# வேலூரில் வைர விழா!ஜோய்ஆலுக்காஸ் ‘பிரில்லியன்ஸ்’ கண்காட்சி துவக்கம்

வேலூர், பிப்.25-

உலகப் புகழ் பெற்ற ஜோய்ஆலுக்காஸ் நிறுவனம் நடத்தும் ‘பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ’ இன்று வேலூர் ஷோரூமில் தொடங்கி மார்ச் 8, 2026 வரை நடைபெறுகிறது. பிரைடல் மற்றும் நவீன வடிவமைப்புகளில் பிரத்யேக வைர நகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் தலைவர் ஜோய் ஆலுக்காஸ் கூறுகையில், “வைரங்களின் நிலையான அழகை பிரதிபலிக்கும் இந்த கண்காட்சி வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான நகைகளை தேர்வு செய்ய சிறந்த வாய்ப்பு” என்றார். ₹1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட வைர நகை வாங்குதலுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் முன்னிட்டு அதிமுகவினர் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

தஞ்சாவூர் பிப். 25-

மறைந்த முன்னால் முதல்வர் 78 வது பிறந்த நாளை முன்னிட்டு அதிமுக சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு மத்திய ஒன்றியம் சார்பில் கண்டியூரில் தஞ்சை மேற்கு மாவட்ட செயலாளர் ரெத்தினசாமி தலைமையில் மத்திய ஒன்றிய செயலாளர் இளங்கோவன் முன்னிலையில் அவரது திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி மதிய உணவு கொடுத்தனர் இந்நிகழ்வில ஒன்றிய செயலாளர்கள் ராஜா சூர்ய பிரகாஷ் மாவட்ட கழக துணைச் செயலாளர் வளப்பகுடி பரமசிவம் மாவட்ட மாணவர் அணி செயலாளர் விமல் அமமுக மாநில விவசாய அணி செயலாளர் ஜோதி உட்பட பலர் கலந்து கொண்டனர்



# ஒட்டன்சத்திரம்தென்னை சாகுபடியில் ஊடு பயிர்கள் விளைவிக்கும் பயிர்கள் குறித்து விழிப்புணர்வு

ஒட்டன்சத்திரம், பிப் 25-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டார பகுதியில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையை சேர்ந்த நான்காம் ஆண்டு படிக்கும் மாணவன் கா.சஞ்சய்

கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திட்டம் (ஸிகிகீணி 202526 )

ஒட்டன்சத்திரம் குழு நடத்திய

தென்னைச் சாகுபடியில் ஊடுபயிர் (Coconut Intercropping) என்பது நில பயன்பாட்டை அதிகரிக்கவும், கூடுதல் வருமானம் பெறவும் உதவும் சிறந்த முறையாகும். தென்னை மரங்களுக்கிடையேயான இடைவெளியில் வாழை, பாக்கு, மிளகு, கோகோ, கிழங்கு வகைகள் மற்றும் மருத்துவத் தாவரங்களை நடுவது, நீர் மேலாண்மை மற்றும் களைக் கட்டுப்பாட்டிற்கு உதவுவதாக அப்பகுதியில் வாழும் தென்னை விவசாய பொது மக்களுக்கு எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்வில் மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் விவசாய பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



■ 2026 ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் மதுரை மாநகர் வடக்கு தொகுதியில் மீண்டும் போட்டியிட விருப்பமனுவை தளபதி எம்.எல்.ஏ. அண்ணா அறிவாலயத்தில் தலைமை கழக நிர்வாகிகளிடம் அளித்தார். உடன் நிர்வாகிகள் ஏ.கே. ஆறுமுகம், ஜீவன் ரமேஷ், முத்து கணேசன், ரவீந்திரன், ராஜேஷ், உட்பட பலர் உள்ளனர்.




# தாம்பரம் அடுத்த சேலையூரில்தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு தலைகுனியாது என்ற நிகழ்ச்சி

தாம்பரம், பிப்.25-

கிழக்கு தாம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது தமிழ்நாடு தலைகுனியாது என்னும் தலைப்பின் சிறப்பு அழைப்பாளராக கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அவர்களும் இணைந்து தாம்பரம் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் பா.ஜீவானந்தம், சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் இக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர் உடன் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, தாம்பரம் தொகுதி பார்வையாளர் பருதி இளம் சுருதி, மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ் பகுதி செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் சேகர், செம்பாக்கம் சுரேஷ், நடராஜ், மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ், கொடி தாமோதரன், ரமணி ஆதிமூலம், வட்ட செயலாளர் சீனிவாச குமார், கழக நிர்வாகிகள் நலச்சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 78பிறந்தநாள் முன்னிட்டு இன்று புதுக்கோட்டை மாவட்ட அமைப்பு செயலாளர் டாக்டர் விஜயபாஸ்கர் எம்பி பிஎஸ் எம் எல் ஏபுதுக்கோட்டை மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் டாக்டர்ஸிகூஷி பழனிவேல் அவர்கள் பொதுமக்கள் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றது.

# காவல்துறை அறிவிப்பு

**நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறும் பட்சத்தில் தேடப்படும்**

**குற்றவாளியாக அறிவிக்கப்படுவார்: காவல்துறையினர் எச்சரிக்கை**

சிவகங்கை மாவட்டம், சாலைக்கிராமம் காவல் நிலையத்தில் கடந்த 1998ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக, நீதிமன்றத்தில் ஆஜராகாத நபருக்கு காவல்துறை சார்பில் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பின்னணி:

சாலைக்கிராமம் காவல் நிலைய குற்ற எண் 149/1998ன் கீழ் (IPC பிரிவுகள் 147, 148, 341, 324, 424, 307, 427) தொடரப்பட்ட வழக்கு, சிவகங்கை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் (SC No. 128/2019) விசாரணையில் உள்ளது.

பிடியாணையும் காலக்கெடுவும்:

இந்த வழக்கின் எதிரியான ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா, கீழக்காவனூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன் (த/பெ. கருப்பையா) என்பவருக்கு எதிராக கடந்த 22.10.2019 முதல் பிடியாணை (Warrant) நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில், கோவிந்தன் வரும் 27.02.2026ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்னரோ சம்பந்தப்பட்ட சிவகங்கை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று சாலைக்கிராமம் காவல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

காவல்துறை எச்சரிக்கை:

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறினால், சட்ட நடைமுறைகளின்படி கோவிந்தன் "தேடப்படும் குற்றவாளியாக" (Proclaimed Offender) அறிவிக்கப்படுவார் என இந்த அறிவிப்பின் மூலம் காவல்துறை எச்சரித்துள்ளது.



■ செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலை பகுதியில் அம்மா அவர்களின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு திருநீர்மலை பகுதி கழக சார்பில் திருவருள் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி காலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்ச்சி திருநீர்மலை பகுதி கழக செயலாளர் ஆர் எஸ் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் ஏற்பாட்டில் மிக சிறப்பாக நடைபெற்றதுஇது சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் கலந்துகொண்டு கழக கொடியேற்றி வைத்து திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு புடவை மற்றும் காலை சிற்றுண்டி வழங்கினார்கள் இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் ரகுபதி, செயலாளர் எஸ்.ஆர்.துரை, ஏ.ராதா, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி துணை தலைவர் அன்பரசன் மாவட்ட பிரதிநிதி கே எஸ் பிரசாந்த் முப்பதாவது வட்டக் கழகச் செயலாளர் எம்.முருகன், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161